thiraimalar.com
# திரைமலர்
வெள்ளிக்கிழமை தோறும்
மலர்-1 இதழ்-5 .காம்
1.9.2023

free
e-magazine

## YouTube சேனல் விருந்தா? விஷமா?

பல்சுவை
வார
இதழ்

E-magazine




# கார்ல்சன் வெற்றியைவிட பிரக்ஞானந்தாவின் தோல்வியை பேசிய உலக நாடுகள்



Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# யானை பலம் யானைக்கு தெரியாது தமிழக சிறப்பு தமிழனுக்கு விளங்காது

யானையின் பலம் யானைக்கு தெரியாது, அதனால்தான் யானையை ஒரு சிறு சணல் கூட கட்டுப்படுத்திவிடும்.

காரணம், சணலை யானையைவிட பலமானதாக காட்டி அந்த யானையின் மதியை மழுங்கடித்துவிடுவார்கள்.

இந்த வகையில் தற்போது ஒவ்வொரு தமிழர்களின் திறமையையும், தமிழகத்தின் பெருமையையும் அரசியல் தலைவர்கள் மழுங்கடித்து வைத்துள்ளனர்.

ஆனால் உண்மையில்.... உலகில் தலை சிறந்த மாநிலமாக திகழ்வது நமது தமிழகம் அதைப் பற்றிய தகவல்:

1. இங்கு 9 ஏர்போர்ட் உள்ளது. அதில் 4 இன் டர்நேஷனல் ஏர்போர்ட்
2. சுமார் 36,000+ பெரிய கம்பெனிகள் உள்ளது
3. உலகில் முதல் தோன்றிய மாநகரம் இங்கு தான் உள்ளது
4. உலகில் தங்கம் அதிகமாக விற்பனை யாகும் மாநிலம் இதுவே
5. உலகில் உள்ள மிக பெரிய கம்பெனிகள் பலவற்றின் சிணிளி இந்த மாநிலத்தை சேர்ந் தவர்கள் தான்
6. இந்த மாநிலம் எந்த மாநிலத்தையும் சார்ந்து இல்லை. ஆனால் இந்த தேசமே இந்த மாநிலத்தை சார்ந்து உள்ளது.
7. முதல் முறையாக கடல்வழி வணிகம் துவங் கியது இந்த மாநிலம்
8. இமேயில் கண்டுபிடித்து இந்த மாநிலம் தான். இதனால் இந்த உலகம் விரைவாக செயல்பட காரணம்
9. விவசாயம் முதல் வான்வெளி வரை பல அறிஞர்கள் தோன்றியது இந்த மாநிலத்தில் தான்
10. உலக வரைபடம் வரைந்து காட்டியது இந்த மாநிலத்தை சேர்ந்தவர்கள் தான்
11. உலகில் முதல் hydrogen அனு ஆயுதம் இந்த மாநிலத்தில் தான் கண்டுபுடிக்கபட்டது
12. உலகில் அதிகமாக இயற்கை வழியில் மின் உற்பத்தி செய்யும் மாநிலம் இதுவே (hydro, wind, solar, Tidel ..ect)

உலகில் முதல் முறையாக "தாய் மொழியை" உருவாக்கியது இந்த மாநிலமே.

உலகில் முதல் முறையாக மொழியை தனது பெயராக கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு.

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com



# YouTube சேனல் விருந்தா? விஷமா?

## YouTube சேனலில் எத்தனை வீடியோக்கள் உள்ளன?

தற்காலத்தில் பொழுதுபோக்கு மற்றும்அனைத்து விதமான தரவுகளை தரும் ஒரே தளமாக விளங் குவது YouTube.

இந்த வளைதளம் உருவாக்கப்பட்டு 15 வருடங் களை கடந்து கொண்டிருக்கும் இந்த சமயத்தில் இந்த தளத்தில் இதுவரை எத்தனை வீடியோக்கள் உள்ளது என்பதை அறிந்து கொள்வதும் அவசியம்.

ஒரு தொழில் நுட்ப வளர்ச்சி பரிணாம வளர்ச்சி அடையும்போது, அதற்கு முந்தைய பரிணாம வளர்ச்சி தன்னால் மறைந்து போகும் என்பதற்கு பல்வேறு தொழில் நுட்பங்கள் எடுத்துக்காட்டாக உள்ளது.

அந்த வகையில் இந்த YouTube தளத்தின் வளர்ச்சி ஒருவகையில் விஞ்ஞான, மெய்ஞான, அஞ்ஞான என்று அனைத்து வகையான செயல்பாடுகளையும் மக்களிடம் எளிதாக கொண்டு சேர்ப்பதால், வானொலி, தொலைக்காட்சி, போன்ற விஞ்ஞான பரிணாம வளர்ச்சி பொருட்களை அழித்த அதே வேளையில், மக்களிடையே இருந்த உறவு இணைப்பையும் அறுத்து வருவது கண் கூடாக காணக்கூடிய ஒன்றாக விளங்குகிறது.

ஒரு கால கட்டத்தில் நகரவாசிகளை மட்டும் கட்டிப்போட்ட தொலைத் தொடர்பு சாதனங்கள் தற்போது கிராம, குக்கிராமங்களிலும் பரவியதைத் தொடர்ந்து, அந்த சாதனத்தின் துணையுடன் YouTube. தளத்தின் வளையில் அனைத்து தரப்பு மக்களும் சிக்கிக் கொண்டு சின்னாபின்னமாகி வருகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒருவகையில், ஆசான் இல்லாத கல்வியை கொடுப்பதுடன், அனுபவமில்லாத பணிகளையும் எளிதாக செய்து முடிக்கும் அறிவை இந்த You-Tube. தளத்தின் மூலம் பெறலாம் என்ற போதிலும், அளவுக்கதிகமாக பொழுது போக்கு சம்பந்தப்பட்ட வீடியோக்களாகவே இருப்பதால் பலரின் நேரத்தை களவாடும் மிகப்பெரிய காலத் திருட்டை இந்த YouTube தளம் செய்வதாகப் பார்க்கப்படுகிறது.

நன்மை தரும் வீடியோக்களினூடே பல தீமை தரும் வீடியோக்களும் மறைந்திருப்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

தொலைக்கட்சி சேனலை மட்டும் பார்த்து வந்த பலர், தங்களுக்கென்று ஒரு சேனலையே இந்த YouTube. தளத்தின் வாயிலாக துவக்கிவருவதால், இத்தலத்தில் நாளுக்கு நாள் பல ஆயிரம் வீடியோக்கள் பதிவேற்றப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 2022 தரவுகளின்படி, பிளாட்ஃபார்மில் உள்ள 37 மில்லியன் சேனல்களில் 800 மில்லியனுக்கும் அதிகமான வீடியோக்களை YouTube வழங்குகிறது.

யூடியூப்பில் ஒரு நாளைக்கு 1 பில்லியன் வீடி யோக்கள் அதன் 2 பில்லியனுக்கும் அதிக மான பயனர்களால் பார்க்கப்படுகின்றன.

தினசரி செயலில் உள்ள பயனர் எண்ணிக்கை 122 மில்லியன் மற்றும் மக்கள் சராசரியாக 19 நிமிடங்கள் வீடியோக்களைப் பார்க்கிறார்கள்.

2021 புள்ளிவிவரங்களின்படி, 14 பில்லியனுக்கும் அதிகமான மாதாந்திர வருகைகளைக் கொண்ட உலகின் இரண்டாவது அதிகம் பார்வையிடப்பட்ட தளமாக YouTubeஉள்ளது. இது அதன் தாய் நிறுவனமான கூகுளுக்கு அடுத்தபடியாக உள்ளது.

- YouTubeஇன் மொபைல் பயன்பாட்டில் 22% பார்வையாளர்களைக் கொண்டுள்ளது.
- மொபைல் பயனர்கள் மூலம் YouTube பயன்பாட்டில் மாதத்திற்கு 24 மணிநேரம் செல விடுகிறார்கள்.
- மொபைல் தவிர்த்து மற்ற ஆண்ட்ராய்டு சாதனத்தின் மூலம் 23.7 மணிநேரத்திற்கு YouTube பயனாளர்கள் செலவிடுகின்றனர்.
- 2020 ஆம் ஆண்டில், பிளாட்ஃபார்மில் 100 பில்லியனுக்கும் அதிகமான மணிநேர கேமிங் வீடியோக்கள் பார்க்கப்பட்டன.
- 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 2.9 பில்லியன் மக்கள் வீடியோ கேம்களை விளையாடியுள்ளனர்.

11 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் எத்தனைப்பேர் YouTube வீடியோவை பார்க்கின்றனர் என்ற கணக்கெடுப்பு படி

- அதில் 80% பெற்றோர் தங்கள் குழந்தைகள் YouTube சேனலை பார்ப்பதாகவும்,
- 19% பெற்றோர் தங்கள் குழந்தை YouTube சேனலை பார்ப்பது இல்லை என்றும்,
- 1% பேர் YouTube தளத்தைப் பற்றி தெரியாது, பதில் சொல்ல முடியாது என்றும் கூறியுள்ளனர்.

இதில் இன்னொரு சர்வே எடுக்கப்பட்டது அதில்

- 35% பேர் YouTube தளத்தை ஒரு நாளைக்கு பல முறை பார்ப்பதாகவும்
- 19% பேர் YouTube தளத்தை ஒரு நாளைக்கு ஒரு முறை பார்ப்பதாகவும்
- 31% பேர் YouTube தளத்தை வாரத்திற்கு ஒரு சில முறை பார்ப்பதாகவும்
- 11% பேர் YouTube தளத்தை சில வாரங்களுக்கு ஒரு முறை பார்ப்பதாகவும்
- 5%த்திற்கும் குறைவானவர்கள் YouTube அடிக்கடி பார்ப்பதாகவும் கூறியுள்ளனர்.

வயது வாரியாக பிரித்துபார்த்தால்

- 5 முதல் 11 வயதுடைய குழந்தைகளில் 89% சதவீதம் பெற்றோர் YouTubeல் வீடியோக்களைப் பார்க்க அனுமதிக்கிறார்கள்
- 3 முதல் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடன்ஒப் பிடுகையில் 81% சதவீதம் பெற்றோர் YouTubeல் வீடியோக்களை பார்க்க அனுமதிக்கின்றனர்.
- 2 வயது முதல் அதற்கும் குறைவான வயதுடைய குழந்தைகளில் 57% சதவீதம் பெற் றோர் YouTubeல் வீடியோக்களை பார்க்க அனுமதிக் கின்றனர்.

இந்த சர்வேப்படி YouTube தளத்திற்கு அதிக மான வாசகர்களாக இருப்பது, இளம்வயது முற் கொண்டு குழந்தை பருவத்தில் உள்ளவர்கள் என்று அறியப்படுகிறது.

கடந்த 11 ஆண்டுகளாகத்தான் YouTube தளம் அதித வளர்ச்சி அடைந்து வருவதாகவும், இந்த தளத்தின் வளர்ச்சியால் மனித இனத்திற்கு ஏற்படும் பாதிப்பு இன்றும் சில ஆண்டுகளில் தெரியவரும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

A to Z வரை அனைத்து தகவல்களையும் வீடியோவாக தரும் YouTube மக்களின் நேரத்தை அதிகம் திருடும் தளமாகவும் விளங்குவதை மறுக்க முடியாது.

இவ்வாறு நேரத்தை திருடும்போது குறிப்பிட்ட வயதினருக்கு இந்த YouTube திருடும் நேரம் என்பது போதைக்கு சமமானதாக இருக்கும் என்று கூறுவதால், வருங்காலத் தலைமுறை 24X7 நாட்களும் YouTube சேனலில் மூழ்கிவிடும் அபாயம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அளவுக்கு மீறினால் மருந்து கூட உயிர்கொல்லியாக மாறிவிட வாய்ப்புள்ளது. தற்போதைய தலைமுறை தற்போது இந்த YouTube வலைதளத்தை அதிகம் பயன்படுத்துவதால் இதுவே இவர்களுக்கு எதிராகவும் மாற வாய்ப்புள்ளது.

YouTube சேனலை மருந்தாக பயன்படுத்துவோம், விருந்தாக ஏற்றால், பல தலைமுறை காணாமல் போகும் என்ற வாதத்தை விளையாட்டாக தவிர்த்துவிட வேண்டாம்.







Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# விண்வெளிப் பயணம் பலிகடாவாக்கப்பட்ட உயிரினங்கள்

இன்று மனிதனின் விண்வெளி ஆக்ரமிப்பிற்கு, பல்வேறு உயிரினங்களின் உயிர்த் தியாகம் ஒரு பலமான காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக இந்த கருத்தை மறுக்க முடியாது. பல வாயில்லா ஜீவன்களின் உயிர்த் தியாகம், இன்று விண்வெளியில் ஒரு நிலையான ஆய்வு நிலையத்தை அமைத்து, அங்கிருந்து பல பயனுள்ள விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளுமளவிற்கு வளர்த்தெடுத்துள்ளது.

இத்தனை கொரோனா அமளிக்குள்ளும், நாஸா இந்த ஆண்டு நடுப்பகுதியில் 1000க்கு மேற்பட்ட கணவாய் மீன்களையும் 5000க்கு மேற்பட்ட நுண்ணுயிர்களையும், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பால்கன்9 என்ற விண்கலம் மூலம் அனுப்பியுள்ளார்கள் என்பது நமக்கு ஆச்சரியம் தரும் ஒரு தகவல்.

ஒரு பிரத்தியேக நோய் மண்டலத்தை எதிர்க்கும் சக்தி கணவாயின் உடலில் உள்ளமை காரணமாக, அது மனிதனுக்கு எந்த வழியில் உதவலாம் என்ற ஆய்வுக்காகவே இவை அனுப்பப்பட்டன.

முதன்முதலாக ரஷ்யாவும் அமெரிக்காவும்தான் போட்டி போட்டுக் கொண்டு, விண்வெளி ஆய்வு களுக்கு உயிரினங்களை அனுப்பத் தலைப்பட்டன.

பல்லாயிரம் அடி உயரத்திற்கு எலி, நாய், பூனை, பன்றி ஆகியவற்றை அனுப்பி அவை எப்படித் தாக்குப் பிடிக்கின்றன என்று பரிசீலிக்கப்பட்டன.

இதன் முடிவில் எலிகளும் குரங்குகளும் பெருமளவில் விண்வெளிக்கு அமெரிக்காவால் அனுப்பப்பட்டன.1949ல் ஆல்பேர்ட்2 என்ற பெயரில் செம்முகம் கொண்ட ஒரு குரங்கும் விண்வெளிக்கு



பறந்தது. இது பூமிக்கு திரும்பும் வழியில் இறந்தது.

ஆனால் ரஷ்யாவோ நாய்களின் மீது அதிகம் நம்பிக்கை வைத்தது. எடையற்ற தன்மையிலும் மிருகங்கள் உயிர்வாழ முடியும் என்பதற்காகவே

இந்த விண்வெளிப் பயணங்கள்..

புது முயற்சியாக, தெரு நாய் ஒன்றைப் பிடித்து ரஷ்யா பயிற்சியளிக்க ஆரம்பித்து. இதற்கு லைக்கா என்று பெயரிட்டு 20 நாள் பயிற்சி முடிவில், விண்வெளிக்கு அனுப்பினார்கள்.

அனுப்பிய விண்கலத்தை பூமிக்கு மீளக் கொண்டுவரும் வசதியின்மையால், லைக்கா பலிக் கடாவாகியது 2008 ஏப்ரல் 11இல் இந்த நாய்க்கு மரியாதை செலுத்தும் முகமாக, மாஸ்கோவில் சிலை வைத்தது குறிப்பிடத்தக்க விஷயம்.

இந்த இரு வல்லரசு நாடுகளை விட பிரான்ஸ், சீனா, ஆர்ஜென்டீனா, ஜப்பான், ஈரான் என்று வேறு உலக நாடுகளும் உயிரினங்களை விண்வெளிக்கு அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. எறும்பு, தவளை,மீன்கள், சிலந்தி,நத்தை என்று வேறுபட்ட உயிரினங்களை அனுப்பி ஆய்வுகளை நடாத்தி இருக்கின்றன. 2007இல் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் கரப்பான் பூச்சிகளை அனுப்பி உள்ளது.2010இல் ஈரான் ஆமைகளையும் அனுப்பிப் பார்த்துள்ளது.

இதையெல்லாம் அறிய வரும்போது, பல்வேறு உயிரினங்கள் தம் உயிர்களைக் கொடுத்து, பல அரிய தகவல்களை அறிய வழி சமைத்துள்ளன என்பது தெளிவாகவே புரிகின்றது.

சீனப் பெருஞ்சுவர்தான் ஞாபகத்திற்கு வரு கிறது. இதன் கட்டுமானப் பணியில் இறந்தவர் கள் ஏராளம்.

அவர்கள் உடல்கள் மீது கம்பீரமாக நெளிந்து வளைந்து செல்லும் சுவர் இன்று உலகப் பிரபல்யம். அப்படித்தான் இன்று மனிதன் பல்வேறு உயிர்களைப் பலிகொடுத்து, சந்திரனில் கால் பதித்து, விண்வெளியில் அகலக் கால் வைத்துள்ளான்.

அடுத்த வருடம் செவ்வாய் கிரகத்திற்கு ரஷ்யா ஒரு குரங்கை அனுப்ப திட்டமிட்டிருப்பது பிந்திய தகவல்!!!!!!

# பிள்ளை பள்ளிக்கு வரவில்லையென்றால் பெற்றோருக்கு சிறை தண்டனை

சில நாடுகளில் சட்டங்கள் மக்களுக்கு கடுமையாக இருந்தாலும், மக்களால் நாட்டுக்கு தீமை வராமல் தடுக்கும் தடுப்பு வேலியாகவே அமையும்.

அந்த வகையில் சவுதி அரோபியாவில் சில சட்டங்கள் அந்த நாட்டை காக்கும், வளமாக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அந்த சட்டத்தைப் பற்றி சில வரிகளில் பார்ப்போம்.

பள்ளிக்கு வராமல் இருக்கும் மாணவரின் பெற்றோருக்கு சிறை தண்டனை விதிக்க சவுதி அரசு உத்தரவிட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் கல்விதரத்தை உயர்த்த வேண்டும் எனில் கடுமையான விதிகளை உரு வாக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து சவுதி அரசு பிறப்பித்துள்ள உத்தரவில், ஒரு மாணவர் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் விடுமுறை எடுத்தால் முதல் எச்சரிக்கையும் 5 நாட்கள் விடுமுறை எடுத் தால் 2வது எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு பெற் றோருக்கு தெரியப்படுத்தப்படும். 10 நாட்கள் விடுமுறைக்கு பிறகு 3வது எச்சரிக்கை அளித்து பெற்றோர் வரவழைத்து உறுதி மொழி பெறப்படும்.

தொடர்ச்சியாக 15 நாட்கள் வரவில்லை யென் றால் மாணவர் வேறு பள்ளிக்கு மாற்றப்படுவார்.

தொடர்ச்சியாக 20 நாட்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், அம்மாணவனின்பெற்றோ ரிடம் விசாரணை நடத்தப்படும், பதில் திருப்தி யில்லையெனில் பெற்றோர் மீது தேசிய குழந்தைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதியப்பட்டு உரிய நீதிமன்றத்தின் மூலம் சிறை தண்டனை விதிக் கப்படும்.



Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com




# 50 வயதில் ஹீரோவாக ஆசைப்படும் நடிகர்கள் மத்தியில் 23 வயதில் அம்மாவாக நடித்த ஸ்ரீவித்யா

கண்களாலேயே வித்தை காட்டி, நம் மனங்களில் ஆழமாக நிறைந்துவிட்டவர் நடிகை ஸ்ரீவித்யா..

1970களில் தொடங்கி 2000 வரை என சுமார் 30 ஆண்டுகள் மிகத் துல்லியமான நடிப்பு, நேர்த்தியான வசன உச்சரிப்பு, பேசும் விழிகளாலும், தென்னிந்திய சினிமா ரசிகர்களையே தன்னகத்தே வைத்திருந்தார் ஸ்ரீவித்யா.

நாட்டியம், நடிப்பு, இசை என அசாத்திய திற மைகளை ஒருசேரப்பெற்று, திரைத்துறையில் கம்பீரமாக நடைபோட்டவர்கள் ஒருசிலரே. அதில் முக்கிய இடம் ஸ்ரீவித்யாவுக்குத்தான் போய்சேரும். தன் 23 வயதிலேயே அம்மாவாக நடித்தவர்தான் ஸ்ரீவித்யா.

ஒரு வலிமை மிக்க கேரக்டரை கூட, ஆற்றல் கொண்ட ஸ்ரீவித்யாவின் கண்கள் அனாயசமாக வெளிப்படுத்திவிடும்.. ஆனால் ஏனோ, அந்த ஒளிரும் கண்களில், கிளிசரினை ஊற்றி ஊற்றிதான் தமிழ் சினிமா அழ வைத்து அழகு பார்த்தது !,

பாசக்கார தங்கையாய், அழகு காதலியாய், சிறந்த மனைவியாய், அன்பு தாயாய், இனிய அண்ணியாய், உரிய தோழியாய், அனுபவம் மிக்க பாட்டியாய் என்று ஒரு பெண்ணின் அனைத்து முக்கிய பரிணாமத்தையும் தன்னுடைய படங்களில் குறைவின்றி வெளிப்படுத்தியவர். கபடமற்ற, எதையும் நல்லதாகவே நம்பும் குழந்தை மனமே அவரது வாழ்க்கையை புரட்டி போட வைத்தது.

ஆனால், இவரது 35 வயதுக்கு பிறகு, திருமண வாழ்க்கையில் விதி விளையாட துவங்கியது. அனைத்திலுமே திறன்பட சிறந்து விளங்கிய ஸ்ரீவித்யா, மண வாழ்க்கையில் நிமிர முடியவில்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் சறுக்கி விழுந்துவிட்டார். இதனால், 9 வருட கால போராட்டத்துக்கு பிறகு தனித்து வாழ வேண்டிய



Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

நிலைமைக்கும் ஆளானார்.. ஆனாலும், காலை சுற்றின பாம்பு கூடவே இருந்தது.

குழந்தையிலிருந்து ஸ்ரீவித்யாவுக்கு இருக்கும் ஆன்மீக ஈடுபாடு அவரை பண்படுத்தின. நிறைய பக்குவப்படுத்தியது.. பல கதாபாத்திரங்களை துணிந்து ஏற்று நிறைவாக நடித்தார். தளபதி, காதலுக்கு மரியாதை, புன்னகை மன்னன் போன்ற படங்களில் அவரது சாந்தமான முகம்கைகூப்பி வணங்ககூடிய எழிலார்ந்த தோற்றம், இயல்பான நடிப்பு, பக்குவமான உணர்வு போன்றவை மறக்க முடியாதது.

ஆனால் காலம் கொடுத்த சம்மட்டி அடியான புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அழகிய ஓவியம் அலங்கோலமாக தொடங்கியது. வடித்து வைத்த சிலை ஒன்றினை கரையான் அரிக்க துவங்கியது.

பெற்றவர்கள் இன்றி, உற்றார் உறவுகளின்றி, தவித்தார். எல்லாமே சூன்யமாகி போனது. அனைத்து சொத்துக்களையும் என்ன செய்வது? வசதியும் ஆதரவும் அற்ற கலை ஆர்வம் கொண்ட ஏழை குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்காக கோடிக்கணக்கான சொத்துக்களை உயில் எழுதி கொடுத்தார். அந்த சொத்துக்களை ஒருவரிடம் நம்பி ஒப்படைத்தார்.

கல்வி கட்டணத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மாண வர்களுக்கு படிப்பைத் தொடர உதவித் தொகையை வழங்குவதற்கும், தகுதியுள்ள கலைஞர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கும் அந்த சொத்தை பயன்படுத்தி கொள்ள சொன்னார். ஆனால் கோர்ட், கேஸ் என்று அந்த சொத்து விவகாரம் நீண்ட காலம் நடந்து கொண்டிருந்தது.

நோயால் அவதிப்பட்ட ஸ்ரீவித்யாவை யாருமே சென்று பார்க்க அனுமதி இல்லை.. ஆனால் ஸ்ரீவித்யா கடைசி நாட்களில் பார்க்க விரும்பியது தனது நண்பர் கமலஹாசனைதான்!!

இவர்கள் இருவரை பற்றியும் எத்தனையோ எதிர்மறை விமர்சனங்கள் திரையுலக காலில் சக்கரம் கட்டி பறந்தன. ஆனால் அதையும் தாண்டி, புரிதல் என்ற நட்பு பாதையில் பயணித்த ஸ்ரீவித்யாவை மருத்துவமனைக்கு சென்று சந்தித்தார் கமல். பாசத்தையும், நட்பையும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர் இருவரும். ஸ்ரீவித்யாவின் தோற்றத்தை கண்டு கண்கலங்கி நின்றார் கமல். ஸ்ரீவித்யாவும்தான்!

அவரை சந்தித்துவிட்டு மருத்துவமனை விட்டு வெளியே கமலிடம், புற்றுநோய் பாதிக்கப்பட்ட ஸ்ரீவித்யா பார்ப்பதற்கு எப்படி இருக்கிறார் என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு கமல், "உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் நிலை குறித்து வெளியே சொல்வது அநாகரீகம்" என்று சொன்னார். பிறகு விரைவிலேயே ஸ்ரீவித்யா மரணத்தை பற்றி சொன்ன கமல், "அவள் இறந்தாலும் இறவாநட்பு" என்றார். கமலின் மறக்கமுடியாத ஒரே தோழி ஸ்ரீ வித்யாவாகத்தான் என்றென்றும் இருக்க முடியும்.

எனினும், முறையான கவனிப்பு கிடைக்காமல், பாசமும் கிடைக்காமல், அன்புக்கு ஏங்கி தவிக்கும் ஒரு சராசரி பெண்ணாகவே கடைசிவரை ஏங்கி தவித்தார்.. ஆனால், தன்னை சந்திக்க யார் வந் தாலும், அவர்களிடம் கொஞ்சமும் ஈகோ இல்லாமல் பேசுவாராம்.. அவர்களுக்கு உரிய மரியாதையை தந்து பேசுவாராம்.. சொந்த சகோதரி போலவே நடந்துகொள்வதாக, பல பத்திரிகையாளர்கள் நெகிழ்வுடன் நினைவுகூர்ந்திருக்கிறார்கள்.

திரைத்துறையில் எப்பேர்பட்ட பிரபலங்களாக இருந்தாலும் தனிப்பட்ட வாழ்வில் அவர்கள் சிக்குண்டு போய்விடுகிறார்கள் என்பதும், காலம் அவர்களை ஒரு புரட்டு புரட்டியே போட்டு தன்னுடன் அழைத்து சென்றுவிடுகிறது என்பதற் கும் ஸ்ரீவித்யா உதாரணம்.

மனித வாழ்க்கை முறையை மனிதர்கள் மட்டுமே கடைபிடிக்கின்றனர் என்று கூறுவது தவறு, ஒரு வகையில் மிருகங்கள், பறவைகள் கூட மனிதன் ஆரோக்கியமாக இருக்க கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை இன்றுவரை கடைபிடித்துவருகிறது.

ஒருவகையில் மனித இனத்திடமிருந்து கற்ற அந்த நற்செயல்கள், நற்பண்புகளை இன்றைய மனிதன் மறந்துவிட்டாலும், இன்றும் ஒருசில பறவை இனங்கள், மிருக இனங்கள் தொடர்ந்து கடைபிடித்து வருகிறது.

மனிதனிடம் இருந்துதான் முதன் முதலில் நாய் நன்றியை கற்றுக் கொண்டது. ஆனால் மனிதன் மாறிவிட்டான் மிருகங்கள் கற்ற பாடத்தை மாற்றவில்லை இதுதான் உண்மை.

அந்த வகையில் பறவைகள் மனிதனிடமிருந்து

# வாழ்வியல் முறை மனிதன் VS பறவைகள்



கற்றுக் கொண்ட நல்ல விஷயங்களைஇன்று வரை கடைபிடித்து ஆரோக்கியமாக வாழ்கின்றன.

அவை கற்ற நல்ல விஷயங்களைப் பற்றி பார்ப்போம்.

- ❖ இரவு நேரம் ஒன்றும் சாப்பிடுவதில்லை.
- ❖ இரவு நேரங்களில் ஊர் சுற்றுவதில்லை.
- ❖ தன் பிள்ளைகளுக்கு தக்க சமயத்தில் வாழ்க்கைக்கான பயிற்சிகளை அளிக்கின்றன.
- ❖ மூக்குமுட்ட உண்ணுவதில்லை. எவ்வளவு தானியங்களை இட்டு கொடுத்தாலும் தேவையானவற்றை மட்டும் கொத்திவிட்டு பறந்து செல்கின்றன. போகும் போது எதையும் எடுத்து போவதில்லை.
- ❖ இருள் சூழும்போதே உறங்க துவங்குகின்றன.
- ❖ அதிகாலை ஆனந்தமாய் பாட்டு பாடி எழுகின்றன.
- ❖ தனது ஆகாரத்தை அவை மாற்றுவதில்லை.
- ❖ தனது உடலில் வலுவுள்ளவரை உழைக்கின்றன. இரவு அல்லாது மற்ற நேரங்களில் ஓய்வு எடுப்பதில்லை.
- ❖ நோய் வந்தால் உண்ணுவதில்லை. சுகமான பின் உணவு எடுத்துக்கொள்கிறது.
- ❖ தன் குழந்தைகளுக்கு பரிபூரணமான அன்பை கொடுத்து வளர்க்கின்றன.
- ❖ கடுமையான உழைப்பாளிகளாயிருப்பதால், இதயம், கல்லீரல், நுரையீரல் நோய்களால் பாதிக்கப்படுவதில்லை.
- ❖ இயற்கைக்கு எதிராக ஒருபோதும் செயலாற்றுவதில்லை. தனது அத்தியாவசிய தேவைக்கு மட்டும் இயற்கையிலிருந்து பெற்று கொள்கின்றன.
- ❖ தனது கூடு மற்றும் சுற்று சூழல்களை அனுசரனையோடு பாதுகாக்கின்றன.
- ❖ ஒருபோதும் தனது மொழியினை மாற்றி வேற்று மொழி கலந்து பேசுவதில்லை.
- ❖ பறவைகள் கூடுதலாக கூடுகள் கட்டி வாடகைக்கு விடுவதில்லை.

மனித இனத்தில் இருந்து கற்றுக்கொண்ட பறவைகள் இன்று வரை தான் கற்றதை மறக்கவில்லை, ஆனால் கற்றுக் கொடுத்த மனிதன் மாறிவிட்டான். சுயநலத்தில் கால் பதித்துவிட்டான்.

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# கேரளா கொடுத்த அவமரியாதை நடிகர் மாதவன் கொடுத்த அங்கீகாரம்

# ‘ராக்கெட்ரி’ படத்துக்கு மட்டும் தேசிய விருதா! தவறு செய்த கேரள ஆட்சியாளர்களுக்கு?

நடிகர்மாதவன், அதிகம்திரைத்துறையில்நடிகராக வலம் வர வாய்ப்பு இல்லாத போதும், தேசப்பற்று, சேவை மனப்பான்மையில் மக்கள் மனதில் அதிகம் வலம் ஒரு நபராகவே திகழ்கிறார்.

ஒரு தேசப்பற்றாளரை, 'தேசத்துரோகி', என பட்டம் சூட்டப்பட்டு அவருடைய வாழ்க்கையை சீரழிக்கப்பட்ட வரலாற்று ஆவணத்தை பல்வேறு போராட்டங்களை சமாளித்து வெற்றிகரமாக "ராக் கெட்ரி" என்ற திரைப்படம் எடுத்து உலகிற்கு உண் மையை உரக்க சொன்னவர்.

அளவில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருக்காது என்று.

இருந்தும், அவர் துணிந்து எடுக்கக் காரணம் சினிமாவின் மீது அவர் வைத்த காதலும், தேசப் பற்றும், அப்பழுக்கற்ற தலைசிறந்த ஒரு விஞ்ஞானி யின் மீது தேசத்துரோகம் பட்டம் சூட்டப்பட்ட கொடுமையான நிகழ்வை சாமான்ய மக்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற நல்ல எண்ணமே ஆகும்.

நம்பி நாராயணன் அவர்கள் நாகர்கோவிலில்




முதல் படமே தமிழ் படமாகவும், அதிலும் முதன் முறையாக திரைக்கதை ஆசிரியர், இயக்குனர், தயாரிப்பாளர், என்று அனைத்தையும் முதன் முதலில் துவங்கியவர் மாதவன், அவரின் துவக்கம் தற்போது தேசிய விருது வாங்கும் அளவிற்கு அவரை உயர்த்தியுள்ளது.

இந்தப் படத்தை எடுக்கும் பொழுதே, அவருக்கு நன்றாகத் தெரியும் படம் வணிகரீதியாக பெரிய

பிறந்தவர். மதுரை தியாகராயர் கல்லூரியில் மெக் கானிக்கல் இன்ஜீனியரிங் படிப்பை முடித்தவர்.

படிப்பை முடித்தப் பிறகு அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் சீட் கிடைக்க, அங்கு தனது படிப்பை தொடர்ந்தார். அங்கு சீட் கிடைப்பது என்பது சாதாரண விஷயம் கிடையாது.

படிப்பு முடித்தவுடன், அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தில் பணியாற்ற வாய்ப்புகிடைக்




கிறது. அதே நேரத்தில், இஸ்ரோவின் அன்றைய இயக்குனரும் இவரின் குருவும் ஆன விக்ரம் சாராபாய் அவர்கள் இஸ்ரோ விண்வெளி மையத்தில் இயக்குனராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

அவர் நம்பிநாராயணனிடம், 'உன்னுடைய திறமை நம் நாட்டிற்கு பயன்படவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். ஆனால், நாசா கொடுக்கும் சம்பளம் எல்லாம் இங்கே கிடைக்காது என்பதும் உனக்குத் தெரியும். முடிவு செய்ய வேண்டியது நீதான்', என்கிறார்.

அதேநேரத்தில் நாசாவிலும் இவரை பணியிலிருந்து விடுவிக்க மனமில்லை. ஆனால், விஞ்ஞானி நம்பி நாராயணன் பொருளாதாரத்தை தூக்கி எறிந்து விட்டு, தாய்நாட்டிற்காக இஸ்ரோவிற்கு பணியாற்ற வருகிறார். இப்படியாப்பட்டவரைத்தான் தேசத்துரோகி என பட்டம் கொடுத்து, இவரையும் இவருடைய குடும்பத்தையும் மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் 50 நாட்கள் வரை சித்ரவதை செய்திருக்கிறது கேரள உளவுத்துறை போலீஸ்.

இந்திய விண்வெளி மையமான இஸ்ரோ இன்று விண்வெளித்துறையில் பல சாதனைகளைப் படைப்பதற்கு தலைசிறந்த விஞ்ஞானியான நம்பி நாராயணனின் உழைப்பும் அடங்கியிருக்கு.

விண்வெளித்துறையின் எதிர்காலத்தைப் பற்றி யோசித்து, விண்வெளித் துறையின் எதிர் காலம் திரவ எரிபொருள் தொழில்நுட்பத்தை நோக்கித் தான் போகும் என்பதை 1970களில் உணர்ந்து அதற்கான முயற்சிகளில் இறங்கி திரவ எரிபொருள் விண்வெளி என்ஜினைக் கண்டுபிடித்தார் நம்பி நாராயணன்.

இன்றைய ராக்கெட் தொழில் நுட்பத்தில் அதிகமாக பயன்படும் கிரையோஜெனிக் இன்ஜின் துறையின் பொறுப்பாளராகவும் இருந்தவர்.

விக்ரம் சாராபாய் இறந்த பிறகு, ராக்கெட்டுக்கான கருவி ஒன்றை கண்டுபிடிக்கிறார். அதற்கு, 'விகாஸ்', என தனது குருவின் நினைவாக பெயர் வைக்கிறார்.

நிஜக்கதையின் படி நம்பி நாராயணனாக மாதவன்!

விஞ்ஞானி நம்பி நாராயணன் கதாபாத்திரத்திற்கு மிகப் பொருத்தம் நடிகர் மாதவன். நம்பிநாராயணன் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை, மிக சிறப்பாக படமாக்கியிருக்கிறார்.

நம்பிநாராயணன் எழுதிய சுயசரிதை நூல், 'ஓர் மகனுட ப்ரமந பதம்'. அந் நூலை அடிப்படையாக வைத்தே திரைக்கதை அமைத்திருக்கிறார்மாதவன்.

திரைக்கதை அமைத்தப்பிறகும், அவர் அருகிலேயே இருந்து பல ஆலோசனைகளை எல்லாம் கேட்டு ராக்கெட்டின் தொழில்நுட்பங்களை எல்லாம் துல்லியமாக எழுதிய பிறகே படப்பிடிப்புக்கே சென்றிருக்கிறார்.

அதனால்தான், படத்தின் முதல்பாதியில் ராக்கெட் தொழில்நுட்பத்தைப் பற்றி விலாவாரியாக எடுத்துரைக்கிறார்கள். கதை ராக்கெட் சம்மந்தப்பட்டது எனும் பொழுது அதைப்பற்றிய விளக்கமும் தேவைதானே!

காட்சிகளில் எந்த ஜோடனைகளும் இல்லை. அதுவும் உடல்ரீதியாக அவருக்கு கொடுக்கப்பட்ட சித்ரவதைகளைப் பார்க்கும் பொழுது, அவருடைய மன உறுதியைக் கண்டு வியப்படையவைக்கிறது.

ஒருவேளை, சித்ரவதை தாங்கமாட்டாமல் அவர்கள் கூறும் பழியெல்லாம் ஒத்துக்கொண்டிருந்தால்,

ஒரு அப்பழுக்கற்ற தேசப்பற்றாளர் நிரந்தரமாகவே தேசத்துரோகி பட்டத்தை சுமந்திருப்பார். அதை நினைத்துப் பார்க்கும் பொழுது மனம் கலங்கி விடுகிறது.

அவர் சித்ரவதை செய்யப்பட்டு விசாரணைக் கைதியாக 50 நாட்கள் சிறையில் இருந்தபொழுது, இப்படிக் கூட அவருடைய எண்ண ஓட்டம் ஓடியிருக்கும், 'நான், நாசா விண்வெளி மையத்திலேயே வேலை செய்திருந்தால் இப்படியொரு நிலை எனக்கு ஏற்பட்டிருக்காதே', என்று உறுதியாகநினைத்திருப்பார். அப்படி நினைப்பதுதான் நியாயமானதும் கூட.

இவர், பாகிஸ்தானுக்கு இந்திய ராணுவ ரகசியங்களை சொன்னதாக நாளிதழில் வந்ததை படித்துவிட்டு, இவரையும் இவருடைய குடும்பத்தாரையும், சொந்தபந்தங்கள் எல்லாம் அவமதிக்கும் நிகழ்வை எல்லாம் காட்சிவழியாக பார்க்கும் பொழுது எப்படித்தான் இவ்வளவு கொடுமைகளை எல்லாம் இந்தக் குடும்பம் தாங்கியதோ என்ற ஆச்சரியமும் அதிர்ச்சியும்தான் மிச்சமானது.

ஒரு காட்சியில் விசாரணை (50நாட்கள்) எல்லாம் முடிந்து வீட்டிற்கு வரும் பொழுது மகன்களும் மகளும் கண்ணீரோடு நிற்க, மாதவன் (நம்பி நாராயணன்), 'அம்மா எங்கே',ன்னு கேட்க, 'அம்மா ரொம்பவும் ஒடைஞ்சிட்டாங்கப்பா', ன்னு சொல்லி வெடித்து அழ ஆரம்பிக்க, படம் பார்க்கும் நாம் என்ன ஏதுன்னு அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருப்போம்.


மாதவன் (நம்பி நாராயணன்) பதறியபடியே மனைவியின் அறையைத் தேடி ஓடுவார்... அங்கு அவரின் மனைவியின் நிலையைக் கண்டு நம் மனம் அலறித் துடிக்கும். இக்காட்சியில் சிம்ரன் போன்ற திறமை வாய்ந்த நடிகர்களால் மட்டுமே சிறப்பாக செய்ய முடியும். அதனால்தான், மாதவன் இக்கதாபாத்திரத்திற்கு சிம்ரனை மிக சரியாக தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இவரை தேசத்துரோகி என எல்லா ஊடகங்களும் போட்டிப் போட்டு கத்தியது மாதிரி, உச்சநீதிமன்றம் இவரை நிரபராதி என விடுவித்தபோது, ஏன் பெரிய அளவில் Focus பண்ணவில்லை என்பதுதான் ஆச்சர்யம்.

எப்பொழுதுமே ஊடகங்கள் எதிர்மறை சம்பவங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை, நேர்மறை சம்பவங்களுக்கு கொடுப்பதில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

காட்சிப்படி,மாலத்தீவில் இரண்டு பெண்களை இவர் சந்தித்தாகவும் அவர்கள் மூலமாகவே இவர் ராக்கெட் ரகசியங்களை விற்றதாகவும் சொல்லப் படுகிறது. அப்பெண்கள் இவரை பார்த்ததே

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com



இல்லை என்றும் சொல்கிறார்கள். பின் ஏன் கேரள உளவுத்துறை போலீஸ் நம்பிநாராயணனை இப்படியொரு கேஸில் மாட்டவைத்தார்கள் என்றுதான் தெரியவில்லை.

நம்பிநாராயணன் அவர்களின் சக விஞ்ஞானியாக பணியாற்றியவர்களில் அப்துல்கலாமும் ஒருவர் என்பதும் மிக முக்கியமான ஒன்றாகும்.

விஞ்ஞானி நம்பிநாராயணனுக்கு கொடுத்த மன உளைச்சலுக்கு ஈடு செய்யும் விதமாக, இந்தப் படத்திற்கு இந்தியா முழுக்கவே வரிவிலக்கு கூட கொடுத்திருக்கலாம்.

இப்படத்தின் கடைசிக் காட்சி மிகவும் உணர்ச்சிகரமானதாக இருக்கும்.

அந்தக்காட்சியில் மாதவனை dissolve ஆக்கி நிஜ நம்பி நாராயணனை காண்பித்து காட்சியை அழகுபடுத்தியிருப்பார்கள். தன் மனதில் உள்ளதை எல்லாம் கொட்டிய பிறகு, அவர் கண்ணீர் சிந்தி அழும் காட்சியில் திரையரங்கமே ஆழ்ந்த மௌனத்தில் மூழ்கி விடும்.

இசையமைப்பாளர் சாம் C.S., ஒளிப்பதிவாளர் சிரிஷாராய் போன்றவர்களின் அர்ப்பணிப்பை காட்சிகளின் வழியே காண முடியும்.

**சந்திராயன் 3 வெற்றியை கொண்டாடும் அதே வேளையில் தேசப்பற்றாளரை தேசத்துரோகி என குத்தப்பட்ட கொடுமையான காலத்தையும் மீண்டும் நினைவு படுத்தவே இப்படத்திற்கு தேசிய விருது வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.**

**நம்பி நாராயணன் கைதுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்ற போதும், கேரள அரசின் இந்த வெற்று விசாரணைக்கு காரணம் என்ன என்று விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை தரும் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று நம்பி நாராயணன் ஆதரவாளர்கள் கேட்டு வருகின்றனர்.**

# அந்தஸ்து மற்றும் கௌரவமாக மாறிய
# கல்வி வியாபாரம்

ஜப்பானில் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் இருந்தே குழந்தைகளை தங்கள் வகுப்பறை இருக் கை முதலியவற்றை சுத்தப்படுத்த சொல்லிக் கொடுக் கிறார்கள்.

இந்த முறையை இந்தியாவிலும் கடைபிடிக்க வேண்டும். ஜப்பானியர்கள் போல் சுத்தத்தை ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொண்டால் உடலும் மனமும் சுத்தத்தையே நாடும்.

அதேப்போன்று ஆசிரியரை நிறைய கேள்வி கேளுங்கள்! உங்கள்ஆசிரியர் ஸ்ட்ராபெரி மரத்தை பற்றி பாடம் எடுத்தால், எனக்கு அதை காட்டுங்கள், காட்ட முடியவில்லை என்றால் கொய்யா மரத்தை பற்றி பாடம் எடுங்கள்! நீங்கள் கற்றுக் கொடுக்கும் அனைத்தையும் நான் என் கண்ணால் பார்க்க வேண்டும், என்னை வகுப்பறையை விட்டு வெளியே கூட்டிச் செல்லுங்கள் என்று உங்கள் வாத்தியாரை நிர்பந்த படுத்துங்கள்!

உங்கள் தலைமையாசிரியர் அல்லது உங்கள் ஆசிரியர் உங்களை பார்த்து "நன்றாகப் படிக் கிறாய்! நீ கட்டாயம் மருத்துவம் இல்லை பொறி யியல் படிக்க வேண்டும்! வருங்காலத்தில் டாக்டர் இன்ஜினியர் ஆனால் நிறைய சம்பாதிக்கலாம்!" என்று உங்களுக்கு அறிவுரை சொல்லும்பொழுது, அதை அப்படியே ஆமோதிக்காதீர்கள்.

பிடித்திருந்தால் என்ஜினியரிங் படியுங்கள்! ஆனால் பிறருக்காக படிக்காதீர்கள்! மற்றவர்களை கட்டாயப் படுத்தாதீர்கள்! உங்களுக்கு எது நன்றாக வருகிறது பிடித்திருக்கிறது என்று கண்டுபிடித்து அதில் " பர்ஃபெக்ட்" என்று பெயர் எடுங்கள்!

நீங்கள் செய்யப்போவது தோட்டவேலை என்றாலும் இந்தியாவில் மிகச்சிறந்த தோட்டக்காரன் என்று ஆவதே உங்கள் லட்சியமாக இருக்க வேண்டும்!

ஒரு தோட்டக்கலை அல்லது ஒரு கார்பெண்டர் அல்லது ஒரு பிளம்பர் அல்லது ஒரு எலெக்ட்ரிசியன் என்பவன் இன்ஜினியர் என்ற வேலைக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் இல்லை! தொழிற்கல்வி "அக்காடமி" கல்வியை விட எந்த விதத்திலும் குறைந்தது இல்லை!

ஆனால் நம் நாட்டில் தவறான கல்வியறிவு கௌரவம் அந்தஸ்து என்று படிக்காதவன் சினிமா எடுத்து கதை எழுதி அரசியல் செய்து ஆரியம் திராவிடம் என்றெல்லாம் பேசி மக்களை ஆட்டு மந்தைகள் போல மாற்றிவிட்டார்கள்!



உண்மையில் தமிழ் நாட்டு மாணவன் பாவப்பட்ட வன். இந்த உருப்படாத கல்வித்திட்டத் தில் மாட்டிக்கொண்டு வாழ்க்கை யை தொலைத்து விடுகிறார்கள்.

நம் நாட்டில் " சுற்றியுள்ளவர் கள் கொடுக்கும் அழுத்தம்" காரணமாகவே படிக்கிறார்கள்! அந்தஸ் துக்காக பெரியவர்களும் இன்ஜினியர் டாக்டர் வக்கீல் இவர் களுக்குதான் பெண் கொடுப்பேன் என்று காலம் காலமாக சொல்லி மாணவர்களை எதற்கும் உதவாத ஒரு கல்லூரியில் எதற்கும் உத வாத ஒரு படிப்பு படிக்க வைத்து பட்டங்கள் மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வது வாழ்க்கையின் லட்சியம் இல்லை! கல்லூரியில் காதல் கட்டாயம் என்பது போன்ற பிற்போக்கான எண்ணங்கள் இந்திய சினிமா ஏற்படுத்திய தாக்கம்!

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com




அதனால்தான் இந்திய சினிமாக்களை பார்க்காதீர்கள் என்று சொல்கிறேன்!

பணம் சம்பாதிப்பதைநோக்கமாக வைத்து பாடங்கள் படிக்காதீர்கள்! வேலை கிடைப்பதற்காக படிக்காதீர்கள் அறிவை வளர்ப்பதற்கு படியுங்கள்! தானாக பணம் வந்து சேரும்!

ஆண்கள் பெண்கள் தனித்தனியாக ஒரு தீவு போல் பள்ளிகளில் வாழாதீர்கள்! பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று சகஜமாக பழகுங்கள். ஆண், பெண், இருவருக்கும் உள்ள எல்லையை தாண்டாமல் பழகினால் நட்பின் ஆழத்தை எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் பள்ளிக்குள் சினிமா நடிகர் நடிகைகள் பற்றி பேசாதீர்கள்! சினிமா நடிகர்கள்பணம் சம்பாதிப்பதற்காக, பள்ளி வாழ்க்கை, கல்லூரி வாழ்க்கை பற்றி தவறாக உங்களுக்கு பாடம் எடுக்கிறார்கள்!

பெரிய நடிகர்கள் படத்தை பார்க்காதீர்கள்! ஜுராசிக் பார்க் லைஃப் ஆஃப் பை ஜங்கிள் புக் போன்ற படங்களை பாருங்கள்! விஜய் சிம்பு போன்றவர்கள் திரைப்படத்தை பார்க்காதீர்கள்!

ஒரு பணக்காரன் சினிமா டைரக்டராக இருந்து தன் திறமை இல்லாத பிள்ளைகள் மட்டும் வாய்ப்பு கொடுத்து சுலபமாக நடிகன் ஆக்கிவிடுவான்! பணக்காரன் தன் உருப்படாத மகனை பணத்தின் மூலம் சுலபமாக பட்டதாரி ஆக்கிவிடுவான்!

பணத்திற்காக ஒரு கழுதை பணத்துடன் வரும்போது அதற்கு கூட டாக்டர் பட்டம் கொடுக்கும் நம் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்! அதனால் பட்டன்கள் மதிப்பெண்கள் மீது மிகப் பெரிய மயக்கம் வேண்டாம்! திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள் அது போதும்!

சமூகத்தை கெடுப்பது இந்த குடும்ப ஆதிக்கம் தான்! அதனால் இவர்களை தப்பித்தவறி கூட ரோல் மாடலாக கொள்ளாதீர்கள்! ஒரு அரசியல்வாதி சினிமாக்காரன் தன் மகனை மகளை மட்டும்தான் வாய்ப்பு கொடுத்து மற்றவர்களை வாழ விட மாட்டான்! ஆனால் வெளியே சமத்துவம் பேசுவான்! தவறிக்கூட சினிமா நடிகர்களை ரோல்மாடலாக வைத்துக் கொள்ளாதீர்கள்! அவர்கள் போட்டோ கூட வைத்துக் கொள்ளாதீர்கள்!

தமிழ் என்று சொல்லிக்கொண்டு ஜாதி என்று சொல்லிக்கொண்டு தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் ஒழுக்கம் அறிவு அனைத்தும் நாசம் செய்துவிட்டார்கள்! இவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்!

இவர்கள் நடத்தும் கல்லூரிகளில் பள்ளிகளில் பணத்தை கொட்டிக் கொடுத்து சேர்க்காதீர்கள்! இவர்கள் நடத்தும் பள்ளிகளில் படிப்பதற்கு பேசாமல் இருக்கலாம்!

எல்லோருக்கும் எல்லா மாணவர்களுக்கும் சிறந்த ரோல்மாடல் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்கள் தான்! தமிழ்நாட்டு பள்ளிகள் கல்லூரிகள் மற்றும் கல்வியை குட்டி சுவர் ஆக்கியவர்களே அரசியல் வாதிகள்தான் என்பதை மறக்காதீர்கள்.

அதனால் தமிழ் என்று யார் ஏமாற்றினாலும் மாணவர்கள் அவர்களிடம் ஏமாறாதீர்கள்! தமிழ என்ற போர்வையை வெளியே பேசி, அவர்கள் நடத்தும் கல்லூரிகளில், பள்ளிகளில் அரசியல் பணம் மட்டும் தான் இருக்கும்! அவர்கள் பேச்சைக் கேட்டு படிப்பை கெடுத்துக் கொள்ளாதீர்கள்!

படிக்கும்போது அரசியல் போராட்டம் போன்றவற்றில் கலந்து கொள்ளாதீர்கள்!

கொண்டாட்டங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்! புத்தகங்கள் நிறைய படியுங்கள்! குறிப்பாக அப்துல் கலாம் புத்தகங்களை படியுங்கள்! அவர் போட்டோவை இதயத்திலும் அவர் அறிவுரையை சிந்தையிலும் வையுங்கள்! அது போதும்!

கடைசியாக ஒரு விஷயம் மிக முக்கியமான விஷயம் மதிப்பெண்களை துரத்தாதீர்கள்! மதிப்பெண் என்பது ஒரு மாய மான்!

99 புள்ளி 99 மதிப்பெண் பெற்றவர் ஐஐடி போன்ற இடங்களில் .01 மதிப்பெண்ணை தவற விட்டதற்காக தற்கொலை செய்துகொண்டு உள்ளார்கள்!

இவ்வளவு அறிவு உள்ளவர் ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார் என்றால் நம்முடைய கல்வி திட்டத்திலேயே ஒரு கோளாறு உள்ளது என்பதை புரிந்து கொள்ளுங்கள்! எப்பேர்பட்ட இழப்பு! கூடாது இனிமேல் மாணவர்கள் இப்படி சிந்திக்க கூடாது! வாழ்க்கையில் மற்ற விஷயங்களை கற்றுக் கொள்ளுங்கள்!

அதற்கான மார்க்குகளை மதிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை நன்றாக படித்தால் அது வரும், வரவில்லை என்றால் குறை கல்வித் திட்டத்தில்தான் உள்ளது நம்மில் இல்லை என்று தன்னம்பிக்கை கொள்ளுங்கள்!

# பாடம்

அது ஒரு பெண்கள் கல்லூரி! பெண் கல்லூரி பாத்ரூமுக்குள் (கவலைப்படாதீர்கள் சும்மா கதை தான்) நாம் உள்ளே போகிறோம்!

அந்த கழிவறைக்கு உள்ளே உள்ள வாஷ் பேசின் கண்ணாடியில் முகம் பார்த்து அந்த கல்லூரியில் படிக்கும் பெண்கள் தங்கள் உதட்டுச் சாயத்தை பூசிக்கொள்வார்கள்! உதட்டுச் சாயத்தைப் பூசிக்கொண்டு அதிகமான சாயத்தை கண்ணாடியில் தங்கள் உதடுகளை பதியவைத்து எடுத்துவிடுவார்கள்!

இப்படி பல பெண்கள் தங்கள் உதட்டு சிகப்பு தடத்தினை வைத்து எடுப்பதால் கண்ணாடி முழுவதும் தினமும் உதட்டுச்சாயம் படித்து காட்சியளித்தது!

அதை தினமும் சுத்தம் செய்யும் துப்புரவுத் தொழிலாளி மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்!

ஆசிரியரிடம் பலமுறை முறையிட்டார்! அந்தப் பெண் ஆசிரியர் "இப்படி செய்யக் கூடாது!" என்று பலமுறை கூறியும் அந்த கல்லூரியில் படிக்கும் இளம் பெண்கள் கேட்பதாய் இல்லை! படிப்பை விட அவர்களுக்கு அழகு முக்கியமாக போய்விட்டது போலும்!


Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

ஆசிரியரும் துப்புரவுத் தொழிலாளி மற்றும் அந்தப் பெண் ஆசிரியர் தலைமை ஆசிரியையிடம் முறையிட்டார்கள்!

எவ்வளவு சொன்னாலும் இவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள் நீங்கள் தான் இவர்களுக்கு புத்திமதி சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்!

பொறுமையாக கேட்டுக் கொண்ட தலைமை ஆசிரியை, எல்லா பெண்களையும் அழைத்தார்! கழிவறைக்கு அந்த கண்ணாடி இருக்குமிடத்திற்கு கூட்டிச் சென்றார்!

நீங்கள் எல்லோரும் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்கள், இப்படி கண்ணாடியில் நீங்கள் உங்கள் உதட்டை பதிய வைப்பது தவறு! இதனால் இதை சுத்தம் செய்ய துப்புரவு தொழிலாளி எவ்வளவு சிரமப்படுகிறார் என்று தெரிந்தால் நீங்கள் செய்ய மாட்டீர்கள்!

இப்படி எடுத்துச் சொல்லி "நீங்களே பாருங் கள் அவர் இதை சுத்தம் செய்ய எவ்வளவுசிரமப்படுகிறார் என்று!" என கூறிவிட்டு அந்த தொழிலாளியை பார்த்து "நீங்கள் ஒருமுறை இந்த கண்ணாடியை எப்படி சுத்தம் செய்கிறீர்கள் என்று செய்து காட்டுங்கள் இவர்களுக்கு!" என்று கேட்டுக்கொண்டார்!

துப்புரவு தொழிலாளி வந்தார்! அங்கே மூலையில் வைத்திருந்த கழிவறை சுத்தம் செய்யும் துடைப்பத்தை எடுத்து ஒரு முறை கழிவரை தொட்டிக்குள் துடைப்பத்தை முக்கி எடுத்தார்! நன்கு அந்த அழுக்கு தண்ணீரில் ஊறிய பின் துடைப்பத்தை கண்ணாடி மீது நன்கு தேய்த்து உதட்டுச்சாயம் அத்தனையையும் நீக்கினார்!

இந்த அற்புதமான செயல்முறை விளக்கத்தை, அவர்கள் எல்லோரும் கண்ணாடியை எப்படி அவர் சுத்தம் செய்கிறார் என்று பார்த்த பிறகு எந்த மாணவியும் அதற்குப் பிறகு கண்ணாடியில் உதட்டைப் பதிப்பது இல்லை! அத்துடன் அந்த தவறான பழக்கம் அடியோடு நின்றுவிட்டது!

# கூத்துப்பட்டறை நடிகர் வினோத்குமார் தயாரிக்கும்

# பிரம்மாண்ட திரைப்படம்



நடிகர் வினோத்குமார் அவர்கள் இயக்கி கதாநாயகனாக நடிக்கும் திரைப்படம் மதுரையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு பூஜையுடன் துவங்கி மதுரை திருநெல்வேலி கமுதி ஆகிய இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

இயக்குனர் கதையை பற்றி கூறுகையில் இது இன்னொரு சுப்பிரமணியபுரம் மதுரையை சார்ந்து வந்த படங்களில் இது வேறுபட்ட கதைகளம் மதுரை சார்ந்த படத்தில் இது ஒரு மைல்கல்லாக நிச்சயம் அமையும் என்று கூறினார்.

இப்படத்தில் நடிகர்களாக வில்லன் நடிகர் சாய்தீனா, லொள்ளுசபா மனோகர், திருப்பாச்சி பெஞ்சமின், விஸ்வாசம் சிட்டு குருவி பாட்டி மற்றும் பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

இப்படத்தில் வில்லன்களாக MSPராஜேந்திரன் V J மைக்கேல்ராஜ் ஆகியோர் நடித்துள்ளனர் கதாநாயகிகளாக சாரா மோனு மற்றும் ரோஸ்




Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com




நடிக்க முக்கிய கதாபாத்திரத்தில் சுப்பிரமணியபுரம் டும்கான் மாரி அதை தொடர்ந்து மாமா எனும் கதாபாத்திரத்தில் ஜெய்சங்கர் (police SI) எனும் முக்கிய கதாபாத்திரத்தில் ஈரோடு சேகர் ஆகியோர் நடித்துள்ளனர்.

ஒளிப்பதிவு விஜய் வெங்கடேசன் இசை முகேஷ் முனுசாமி படத்தொகுப்பு ரத்னம்பாலாஜி, பாடல்கள் கவிஞர் திருண் சூர்யா மற்றும் நடனம் அருண் பன்னீர்செல்வம், வடிவமைப்பு திராவிடநேசன், ஒப்பனை நந்தினி, இப்படத்தில் காதல் பாடலை பிரபல பாடகர் மகாலிங்கம் பாடவுள்ளார் மற்றும் கதாநாயகன்



அறிமுக பாடலை பாண்டிச்சேரி கிருஷ்ணா அவர்கள் பாடவுள்ளார்.

இப்படத்தின்பாடல் படப்பிடிப்பு சில நாட்களில் துவங்கவுள்ளதாகவும் படத்தில் மிக பிரமாண்டமாக ஜட்டம்சாங் 100 கலைஞர்களை வைத்து எடுக்க திட்டமிட்டிருப்பதாக கூறினார்.

விரைவில் படத்தின் தலைப்பு முதல்பார்வை சினிமா பிரபலங்களால் வெளியிடப்படும்என்பதனை இயக்குனரும் கதாநாயகனுமான வினோத்குமார் தெரிவித்தார்.

இவர் கூத்துப்பட்டறை நடிகர் என்பது குறிப்பிடத்தக்கது.


## பல்சுவைச் செய்திகளை தரும் திரைமலர்.காம் இணையதளத்தில்

# நிருபராக விரும்புகிறீர்களா?

ஆர்வம் மட்டுமே போதும்
பணி அனுபவம் தேவையில்லை,
தொடர்பு கொள்ளவும்.

**9444264610**

# கருப்பட்டி காப்பி அல்வா

### தேவையான பொருட்கள்

காபி தூள் 2 டேபிள் ஸ்பூன்
சோள மாவு 2 கப்
தண்ணீர் 5 கப்
கருப்பட்டி இரண்டரை கப்
வாட்டர் மெலன் விதை 50 கிராம் தோலுரித்தது
நெய் 50 எம்எல்
ஏலக்காய் தூள் ஒரு டேபிள்ஸ்பூன்
எலுமிச்சைச்சாறு 1
முந்திரி திராட்சை 20 கிராம்

### செய்முறை



ஒரு அடிகனமான கடாயில் சோள மாவு கருப்பட்டி காப்பித்தூள் வாட்டர் மிலன் விதை தண்ணீர் ஊற்றி நன்றாக கட்டி யில்லாமல் கலந்து கொள்ள வேண்டும்.

அந்த பாத்திரத்தை அடுப்பில் வைத்து மிதமான தீயில் மெதுவாக கைவிடாமல் கிளற வேண்டும்.

இப்போது அல்வா கெட்டியாகும் பதத்திற்கு வந்தவுடன் அதில் நெய் ஊற்றி நன்றாக அதே மிதமான தீயில் 5 லிருந்து 7 நிமிடங்கள் பச்சை வாசனை போகும் வரை கிளற வேண்டும். இப்போது முந்திரி திராட்சை ஏலக்காய் சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கி சூடாக பரி மாறலாம். சுவையான காப்பி கருப்பட்டி அல்வா தயார்

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# வேர்க்கடலை சாக்லேட் தோசை

### தேவையான பொருட்கள்

பச்சை வேர்க்கடலை ஒரு கப்
இட்லி அரிசி 2 கப்
உளுந்து 100 கிராம்
வெந்தயம் 1 டேபிள் ஸ்பூன்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு
சீரகம் ஒரு டேபிள்ஸ்பூன்
கடுகு , 1 டேபிள் ஸ்பூன்
கருவேப்பிலை 10 இலை

### செய்முறை

இரண்டு பாத்திரத்தில் தனித்தனியே வேர்கடலை, இட்லி அரிசி , மற்றும் உளுந்து, வெந்தயம் ஆகியவற்றை ஆறு மணி நேரம் நன்றாக ஊற வைக்க வேண்டும்.

ஊறிய பிறகு கிரைண்டரில் தனித்தனியே அரைத்து இரண்டையும் ஒன்றாக உப்பு சேர்த்து 4 இருந்து 5 மணி நேரம் புளிக்க வைக்க வேண்டும்.

தாளிப்பு கரண்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை, சீரகம் ஆகியவற்றை மாவில் கலந்து கொள்ள வேண்டும்.

தோசைக்கல்லில் மாவை ஊற்றி தோசை வார்க்கலாம்.






# கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

# கார்ல்சன் வெற்றியைவிட பிரக்ஞானந்தாவின் தோல்வியை பேசிய உலக நாடுகள்




நெற்றியில் பட்டை, சிறியதாக ஒரு புன்னகை பதற்றமில்லாத எதார்த்தத்திற்கு சொந்தக்காரன் தான் 18 வயது பிரக்ஞானந்தா, இவரின் முழு பெயர் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா.

2023 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உலக செஸ் சாப்பியன்ஷிப் இறுதிப் போட்டி உலக நாடுகளிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

கடந்த 12 ஆண்டுகளாக, உலக செஸ் அரங்கில் தனது முதலாவது இடத்தை நழுவ விடாமல் தக்க வைத்துக் கொண்டிருக்கும் பிரசித்தி பெற்ற வீரர் (32 வயது) மேக்னஸ் கார்ல்செனுக்கு, 18 வயது நிரம்பிய பிரக்ஞானந்தா மிகப்பெரிய சிம்ம சொப்பனமாகவே திகழ்ந்தார்.

செஸ் போட்டியில் மிகப்பெரிய ஜாம்பவானாக இருந்தார் கார்ல்சென்னுக்கு, பிரக்ஞானந்தாவின் ஒவ்வொரு காய் நகர்த்தலும் மிகவும் டென்ஷனுக்குள்ளாக்கியது.

ஒருசில நேரங்களில் ஒவ்வொரு காய் நகர்த்தலுக்கும் பல நிமிடங்களை எடுத்துக் கொண்டார் கார்ல்சென்.

உலக சாப்பியனுக்கு தண்ணிகாட்டிய இந்திய வீரரைப் பற்றி வெளிநாட்டு ஊடகங்கள் மிகப்பெரிய அளவில் பேசு பொருளாக மாற்றியிருந்தது.

நான்கு முறை உலக சாம்பியன் பட்டம் பெற்றிருந்தாலும், அவரது முதல் உலகக் கோப்பை

thiraimalar.com திரைமலர்

வெற்றியாக இது அமைந்தது. இதற்கு முன்னர் மூன்று முறை கார்ல்செனை வீழ்த்தியிருந்தார் பிரக்ஞானந்தா.

இறுதிச் சுற்றில் வழக்கமான ‘கிளாசிக்கல்’ ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. வேறு வழியில்லாமல், இரண்டு ‘டைபிரேக்கர்’ஆட்டங்கள் மூலம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பது என்று முடிவாகியது. மூன்றாவது நாளில் நடைபெற்ற ‘டை பிரேக்கர்’ ஆட்டத்தின் இரண்டாவது வாய்ப் பின் 22ஆவது நகர்த்தலில் ‘டிரா’ ஆனதால், கார்ல் சென் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த வெற்றி அதிர்ஷ்ட வெற்றி, போராடி கிடைத்த வெற்றி அல்ல என்று உலக நாடுகள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

பைனல், 'கிளாசிக்கல்' முறையில் (இரண்டு போட்டி) நடக்கிறது. முதல் 40 நகர்த்தலுக்கு இரு வருக்கும் தலா 90 நிமிடம் தரப்பட்டன. இருவரும் மோதிய முதல் போட்டி 35 வது நகர்த்தலில் 'டிரா' ஆனது. 0.50.5 புள்ளி பகிர்ந்து தரப்பட்டன.

இந்திய வீரர் பிரக்ஞானந்தா தோல்வி அடைந் தாலும் இரண்டாம் இடம் பிடித்திருப்பது, அதுவும் மிகக்குறைந்த வயதில் இரண்டாம் இடம்பிடித்திருப் பது மிகப் பெரிய பேசு பொருளாக மாறியுள்ளது.

இறுதிச் சுற்றை அடைவதற்கு, பிரக்ஞானந்தா பல முன்னணி செஸ் வீரர்களை வீழ்த்திய விதம், பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. உலக செஸ் தரவரிசையில் இரண்டாம் இடத்தில்இருக்கும் ஹிகாரு நகாமுராயை நான்காம் சுற்றிலும், மூன்றாம் இடத்தில் இருக்கும் ஃபாபியானோ கருனாவை அரையிறுதிச் சுற்றிலும் தோற்கடித்தார்.

இறுதிச் சுற்றை எட்டியிருப்பதால், அடுத்த உலக சாம்பியனைத் தீர்மானிக்கும் ‘கேண்டி டேட்ஸ்’ போட்டியில் இடம்பெறும் வாய்ப்பு பிரக்ஞானந் தாவுக்குக் கிடைத்திருக்கிறது.

அஜர்பெய்ஜானில் உலக கோப்பை செஸ் தொடர் நடக்கிறது. இதன் பைனலுக்கு உலகத் தரவரிசையில் 22வது இடத்தி லுள்ள இந்தியாவின் இளம் வீரர் பிரக் ஞானந்தா 18, ஐந்து முறை உலக சாம்பியன் ஆன, உலகின் 'நம்பர்1' வீரர், நார்வேயின் மாக்னஸ் கார்ல்சன் முன்னேறினர்.

'டை பிரேக்கர்' சுற்று துவங்கி நடந்தது. முதல் போட்டியில் வெள்ளை நிற காயங்களுடன் ஆட்டத் தை துவக்கினார் பிரக்ஞானந்தா. 41வது நகர்த்தல் வரை இருவரும் சமநிலையில் இருந்தனர். கடைசி நேர நெருக்கடியில் பிரக்ஞானந்தா தவறு செய்ய, 47 வது நகர்த்தலில் தோல்வி அடைந்தார். பிரக் ஞானந்தா 1.02.0 என பின் தங்கினார்.

'டை பிரேக்கரின்' இரண்டாவது போட்டியில் கருப்பு நிற காய்களுடன் களமிறங்கிய பிரக் ஞானந்தா, வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத் தில் விளையாடினார். மறுபக்கம் கார்ல்சன் போட் டியை 'டிரா' செய்தால் போதும் என்ற நிலையில் களமிறங்கினார். வேறு வழியில்லாத நிலையில் 22வது நகர்த்தலில் போட்டியை 'டிரா' செய்ய இரு வரும் சம்மதித்தனர்.

முடிவில் பிரக்ஞானந்தா 1.52.5 என்ற கணக்கில் தோல்வியடைந்து இரண்டாவது இடம் பிடித்தார். இதனால் உலகின் முதல்நிலை வீரரான மேக்னஸ் கார்ல்சன் சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்தார்.

இந்த சாதனையை உலக நாடுகள் வெகுவாக பாராட்டினாலும், மிகப்பெரிய டப் கொடுத்த பிரக் ஞானந்தாவின் போராட்டத்தைப்பற்றி ஐரோப்பிய ஊடகங்கள் விவாதங்களை நடத்தி வரும்அளவிற்கு பிரக்ஞானந்தா போராடியிருப்பதாக கூறப்படுகிறது.

மேலும், உலகக் கோப்பை செஸ் இறுதிப் போட்டி வரை நுழைந்த இந்திய வீரர் என்ற பெரு மையையும் பெறுகிறார்.

உலக கோப்பை வென்ற கார்ல்சனுக்கு ரூ.91 லட்சமும், 2வது இடம் பிடித்த பிரக்ஞானந்தாவுக்கு ரூ.67 லட்சமும் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டபோது கூட முகத்தில் எந்தவித சலனமும் இல்லாமல் இயல்பாக இருந்த பிரக்ஞானந்தாவின் முகத்தை மட்டும் போக்கஸ் செய்து அரை பக்கம் அளவிற்கு வெளிநாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது. கார்ல்சன் வெற்றியைவிட பிரக்ஞானந்தாவின் தோல்வி உலக நாடுகளில் பேசு




Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com




Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

பொருளாக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரக்ஞானந்தாவின் சாதனைகள்...

எட்டு வயதுக்குட்பட்டோர் மற்றும் பத்து வயதுக் குட்பட்டோருக்கான ஆண்கள் உலக இளம் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 2013 மற்றும் 2015 வருடங்களில் பிரக்ஞானந்தா சாம்பியன் டைட்டில் வென்றிருந்தார்.

ஐந்து வயதில் இருந்தே செஸ் விளையாட்டில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கியவர் 2016ம் ஆண்டு உலகின் யங் இன்டர்னேஷனல் மாஸ்டர் (ஐ எம்) எனும் சிறப்பைப் பெற்றார்.

பிரபல செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த்திற்குப் பின் வெகுவாக செஸ் சம்பந்தப்பட்ட போட்டிகளில் பெரும்பாலான இந்தியர்கள் அதிகம் முன்னேறாத காலத்தில் உள்ளூர் போட்டிகளில் ஒரு சிறிய சுனாமியாக ஜொலித்தார் பிரக்ஞானந்தா, 2018 ஆண்டே இத்தாலியில் நடந்த நான்காவது க்ரெடின் ஓபன் 2018 தொடரில், இறுதிச் சுற்றில் விளையாடுவதற்கு முன்னரே கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று அசத்தியிருக்கிறார் பிரக்ஞானந்தா.

இத்தாலி க்ரெடின் ஓபன் 2018 தொடரை எதிர்கொண்டதன் மூலம் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் எனும் பட்டத்தை பெற்றதுடன், இந்தியாவின் இளம் வயது கிராண்ட் மாஸ்டர் எனும் புதிய பட்டத்தையும் பெற்றார், அதற்கு முன் இந்தியாவின் இளம் வயது கிராண்ட் மாஸ்டர் என்ற பட்டத்தைபெற்றிருந்த பரிமார்ஜன் நெகியின் சாதனையையையும் முறியடித்தவர் பிரக்ஞானந்தா.

பதின் பருவத்தை எட்டுவதற்கு முன்னதாக கிராண்ட் மாஸ்டர் ஆனது உலகிலேயே இருவர் தான். ஒருவர் பிரக்ஞானந்தா, மற்றொருவர் உக்ரைனைச் சேர்ந்த செர்கே கர்ஜாகின்.

ஒவ்வொரு விளையாட்டுக்கும் ஒவ்வொரு யுக்தியை வீரர்கள் கையாள்வார்கள். அந்த வகை யில், கிரிக்கெட்டை போலவே செஸ் ஆட்டத்தில் ஓபனிங் , மிடில், இறுதிப் பகுதி முக்கியமானவை. பிரக்ஞானந்தாவின் யுத்தியை பொறுத்தவரையில் நடு மற்றும் இறுதிப் பகுதியில் அவர் வலுவானவர். தொடக்கத்தில் சமாளித்துவிட்டால் ஆட்டத்தின் இறுதிப்பகுதியில் அவர் அசத்தலாக விளையாடுவார். இந்த யுக்திதான் பிரக்ஞானந்தாவிற்கு தொடர்ந்து கை கொடுத்துள்ளது.

செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் என்பது முனைவர் பட்டம் பெறுவது போன்றது. மிகவும் இளம் வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வெல்வது எளிதில் சாத்தியமல்ல. கடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் கார்ல்சனுடன் விளையாடிய செர்கே கர்ஜாக்கின் தான் உலகின் யங் கிராண்ட் மாஸ்டர்.

செஸ் தொடர்களை பொறுத்தவரையில் திறந்த வகை, மூடிய வகை என இரு பிரிவு டோர்னமெண்ட் உண்டு. ஓபன் செஸ் டோர்னமென்ட்டில் உலக செஸ் கூட்டமைப்பில் இருக்கும் வீரர்களில் யார் வேண்டுமானாலும் பணம் கட்டி விளையாடலாம். ஆனால் குளோஸ்டு டோர்னமென்ட் எனச் சொல் லப்படும் தொடர்களில் குறிப்பிட்ட ரேட்டிங் பெற்ற சில வீரர்களை மட்டுமே அழைத்து போட்டி போடச் செய்வார்கள்.

கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றிருந்த பிரக் ஞானந்தாவுடன் விளையாடுவதற்கு உலகின் பல வீரர்களும் போட்டி போட்டு தங்களது விளையாட்டு நுணுக்கங்களை வெளிப்படுத்தியும், பிரக்ஞானந்தா அந்த நுணுக்கங்களை தவிடுபொடியாக்கி தன்னை மெருகேற்றிக் கொண்டதாக இவரது பயிற்சியாளர் பல்வேறு பேட்டிகளில் கூறியுள்ளார்.

யங் இன்டர்நெஷனல் மாஸ்டர் பட்டம் வென்ற தற்கு பிறகு மூன்று தொடர்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் வெல்வதற்கான தகுதியை அடைய வேண் டும் என்பது பிரக்ஞானந்தாவின் இலக்காக இருந் தது.

கிராண்ட் மாஸ்டர் பட்டம் வெல்ல வேண்டும் எனில் சில விதிமுறைகள் உள்ளன. அதன்படிகுறிப்பிட்ட ரேட்டிங் மற்றும் மூன்று வெவ்வேறு தொடர்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெறுவதற்கான தகுதியை அடைந்து சான்றிதழ் பெற வேண்டும்.

"இத்தாலியில் நடந்த உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் முதல் முறையாக கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெறுவதற்கான விதிகளை பூர்த்தி செய்து சான்றிதழ் வென்றார். இரண்டாவதாக ஏப்ரல் 2018ல் ஹெர்க்லியோன் பிஷர் நினைவு கிராண்ட்மாஸ்டர் நார்ம் டோர்னமென்ட்டில் இறுதி ரவுண்ட் ராபின் போட்டியில் வென்றதன் மூலம் இரண்டாவது





Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

முறையாக கிராண்ட்மாஸ்டருக்கான தகுதியை பூர்த்தி செய்தார். மூன்றாவது முறையாக கிரெடின் ஓப்பனில் கிராண்ட் மாஸ்டருக்கான விதிகளை பூர்த்தி செய்துள்ளார்.

இந்த வகையில் பிரக்ஞானந்தாவின் தற்பேதைய சாதனையை மட்டும் பார்க்காமல் அவர் கடந்த கரடுமுரடான பாதையையும் பார்ப்பது அவசியம்.

சென்னை சிறுவனின் வெற்றிக்கு பின்னணியில் இருந்தவர்களில் மிகவும் முக்கியமானவர் போலியோவால் பாதிக்கப்பட்ட அவரது தந்தை, சென்னை புறநகரான பாடியில் ஒரு சிறிய வீட்டில் மிடில் கிளாஸ் வாழ்க்கை நடத்தும் ரமேஷ் பாபு.

நடுத்தர குடும்பத்தில் பிறந்த ரமேஷ்பாபு தமிழக அரசின் கூட்டுறவு வங்கியில் 23 வயதில் பணிக்குச் சேர்ந்தார். தற்போது சென்னையிலுள்ள கொரட்டூரில் கூட்டுறவு வங்கி கிளையொன்றின் மேலாளராக பணிபுரிகிறார்.

ரமேஷ்பாபு நாகலட்சுமி தம்பதிக்கு இரு குழந்தைகள். இவர்களது பெண் வைஷாலியும் செஸ் போட்டியில் அசத்திக்கொண்டிருக்கிறார்.

## பிரக்ஞானந்தா செஸ் மேதையானதன் பின்னணி

செஸ் விளையாட்டுக்கும் ரமேஷ்பாபுவுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. தனது மகன் எப்படி கிராண்ட் மாஸ்டர் ஆனார் எனும் கதையை நம் மிடம் பகிர்ந்தார் பிரக்ஞானந்தாவின் தந்தை ரமேஷ் பாபு.

"எனது மகள் வைஷாலியை செஸ் வகுப்பில் சேர்த்துவிட்டிருந்தேன். அவள் நன்றாக விளை யாடினாள். ஆனால் செஸ் விளையாட்டுபோட்டி களில் பெரிய நிலைக்குச் செல்ல வேண்டுமென் றால் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டும்.

குடும்ப சூழ்நிலை பொருளாதார சூழ்நிலை எல்லாம் கருத்தில் கொண்டு எனது மகனை செஸ் விளையாட்டில் ஈடுபடுத்தக்கூடாது என்று தான் திட்டமிட்டேன். ஆனால் நான்கு வயது இருக்கும் போதே அக்காவுடன் செஸ் போர்டில் நிறைய நேரத்தை செலவிட்டார் பிரக்ஞானந்தா. தன் வயது சிறுவர்களுடன் நேரத்தை செலவிடாமல் 64 கட்டங்களின் மேல் என் மகன் கொண்டிருந்த காதல் எனது எண்ணத்தை மாற்றியது" என்கிறார் ரமேஷ் பாபு.

வைஷாலிக்கும் பிரக்ஞானந்தாவுக்கும் சுமார் நான்கு வயது வித்தியாசம் இருக்கிறது. பிரக் ஞானந்தா செஸ் விளையாட்டின் அடிப்படையை தனது அக்காவிடம் இருந்து கற்றுக் கொண்டதாகச் சொல்கிறார்,

"போலியோவால் பாதிக்கப்பட்டதால் என்னால் பெரிய பயணங்கள் செல்ல முடியாது. எனது மனைவி நாகலட்சுமிதான் அயல்நாடுகளுக்கு எனது பிள்ளைகளை அழைத்துச் செல்வார். செஸ் விளையாட்டில் இருவரும் உள்ளூரில் நன்றாக விளையாடியதால் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று அங்கேயும் வெற்றியை குவித்து இந்திய அரசின் உதவி மற்றும் செஸ் அகாடமியின் ஏற்பாடுகளில் ஆசிய அளவிலான செஸ் டோர்னமெண்ட் விளையாட்டில் பங்கேற்றனர்.

எனது மகன் தனது திறமையிலேயே நிதி உதவியோடு அயல்நாடுகளில் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு பெற்றாலும் மகனுடன் செல்லும் எனது மனைவியின் பயண செலவுகள் உள்ளிட்டவற்றை நான் பார்த்துக்கொண்டேன்.

தொடக்க காலகட்டங்களில் பொருளாதார ரீதியாக சிரமமாக இருந்தாலும் வருங்கால வைப்பு நிதி உள்ளிட்டவற்றில் கடன் பெற்று சமாளித்தோம். பிள்ளையின் கனவுகளுக்கு அவை ஓர் தடையாக இருக்கக்கூடாது என எண்ணினேன்" என விவரிக்கிறார் பிரக்ஞானந்தாவின் தந்தை.

பிரஞ்ஞானந்தா மற்றும் வைஷாலி இருவரின் வெற்றிக்கு பின்னால் இருப்பது அவர்களது தாய் நாகலட்சுமி. உடல் உபாதைகளையும் தாங்கி உணவு, வெப்ப நிலை வேறுபாடுகளை பொறுத்துக் கொண்டு தொடர்ச்சியாக வெவ்வேறு நாடுகளுக்கு செஸ் டோர்னமெண்ட்டுக்கு தனது பிள்ளைகளை அழைத்துச் சென்றுவருகிறார்.




# மகாசித்தர் போகர்

## (பாகம்–1) இணையதள தொடரின் பரிசு மழை

## முழு தொடரை பார்த்து பரிசை வெல்லுங்கள்...

பரிசு: மகாசித்தர் போகர் இணையதள தொடரின் பாகம் 1–ஐ முழுவதும் கண்டு இத்தொடரைப் பற்றி கருத்துகளை யூடியூப் கமெண்டில் (YouTube - Comment) பதிவு செய்பவர்களில், சிறந்த கருத்து தெரிவிக்கும் 36 அன்பர்களை எங்கள் திரைப்பட குழுவினர் தேர்ந்தெடுத்து பரிசுகளை வழங்க உள்ளனர்...

முதல் பரிசாக மூன்று நபர்களுக்கு தலா 1கிராம் எடையுள்ள மகாசித்தர் "போகர்" உருவம் கொண்ட தங்க டாலர் ஒன்றும்...

இரண்டாவது பரிசாக முப்பத்து மூன்று நபர்களுக்கு தலா 2கிராம் எடையுள்ள ஒருபுறம் முருகப்பெருமான் உருவமும், மறுபுறம் மகாசித்தர் "போகர்" உருவமும் கொண்ட வெள்ளி டாலர் ஒன்றும் பரிசாக மகாசிவராத்திரி அன்று (08.03.2024) தபால் மூலம் அனுப்பபடும்...

மறவாமல் தங்களின் போன் எண்ணையும் கமெண்டில் குறிப்பிட வேண்டுகிறோம்...




Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com



Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# பெண்ணை நிலாவோடு ஒப்பிட்டவனின் நிலை

"என்னடா... மூன்ல கிரேஷ் ஆன லூனா மாதிரி மூஞ்சி இருக்கு...என்ன ஆச்சு?"

" உன்னோட முகம் நிலா மாதிரி இருக்குனு எப்பவோ ஒருதடவை சொல்லியிருந்தேன் போலி ருக்கு... அதான் பொண்டாட்டி அடிச்சிட்டா."

"முகம் நிலா மாதிரி இருக்குனு சொன்னதுக்கா... உன் பொண்டாட்டி அடிச்சிட்டா... அதுவும் எப்பவோ சொன்னதுக்கா?"

"ஆமாடா..."

"அதுல என்ன தப்பு கண்டுடிச்சா?"

"தப்பு இல்ல... உண்மைய கண்டுபிடிச்சிட்டா...!"

"என்னடா... உளர்றே?"

"....சந்திராயனோட விக்ரம் லேண்டர் இன்னைக்கு நிலால இறங்குது இல்ல..."

"ஆமா..."

"அந்த ஆர்வத்துல...நேத்து அதைப் பத்தி நிறைய யூட்யூப் வீடியோ பாத்திட்டிருந்தா...அதோட."

"அதோட....?"

"கூகுள்ல மூனோட க்ளோஸப் ஷாட்ஸ் போட்டோஸ் எல்லாத்தையும்...

பாத்திருக்காடா"

"ஓ...! அப்ப...வாங்க வேண்டியதுதான்.உயிர் போகாம பாத்துக்கோடா...மச்சி...! சரி நான் வரட்டா"

"டேய்...! எப்படி டா சமாளிக்கறது?"

"இது நார்த் ஸைடு....சவுத் ஸைடு எவனும் போட்டோ எடுத்தது இல்ல. நான் சொன்னது சவுத்ன்னு சொல்லி... சமாளிடா..."

"விக்ரம் இன்னைக்கு சவுத் ஸைடுல போட்டோ எடுத்து அனுப்பிச்சின்னா?"

"ஒண்ணும் பண்றதுக்கு இல்ல... விதின்னு நினைச்சுக்கோ"

நீங்களும் இதுபோல் புகழ்ந்து இருந்தால்... முன்னெச்சரிக்கையாக இருங்கள்....

thiraimalar.com திரைமலர்

**Owned, Published by N.Geetharani. Design by SMLGraphics, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : N.Geetharani, Cell: 9444264610.**
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com